பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 27 செவ்வாய்க்கிழமை 10.01.2023 கதிர் 65

### இது ரகசியம் அல்ல!

யாழ். மாநகர சபை கலைக்கப் படாமல், புதிய மேயர் தெரிவு பற்றி அறிவிக்கப்பட்டால் நீதி மன்றத்துக்குப் போய் தடை உத்தரவு வாங்குவேன் என்றார் இது வரை மேயராக இருந்த மணிவண்ணன்.

வழக்குப் போடுவதாக 2

# மணிவண்ணன் அணி விக்கியின் கட்சியில்!

## நேற்று இணைந்தது என அறிவிப்பு



**(ந.லோகதயாளன்)**
**யாழ்ப்பாணம், ஜனவர் 10**

**யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் உள்ளிட்டவர்கள் தமிழ்த் மக்கள் கூட்டணியில் இணைந்துள்ளனர் என அதன் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.** 2

## 2 கிலோ ஐஸுடன் இருவர் சிக்கினர்

சுமார் மூன்றரைக் கோடி ரூபா பெறுமதியான 2 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேகநபர்கள் கல்பிட்டி பிரதேசத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் நடத்தப்பட்ட திடீர் சோதனையின் போது இக்கைது இடம்பெற்றுள்ளது.

## முன்னாள் போராளி உண்ணாவிரதம்



தமிழ் கட்சிகளின் ஒன்றிணைவை வலியுறுத்தி, முல்லைத்தீவு, 2

## பொற்பதி வீதியின் காணியில் ஆயுதங்கள் தேடி நில அகழ்வு

### ஒன்றும் கிடைக்கவில்லை



யாழ்ப்பாணம் கொக்குவில் – பொற்பதி வீதியில் தனியாருக்கு சொந்தமான காணியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் 2

## தேர்தலுக்கு எதிரான வழக்கை நிராகரிக்கக் கோரி 2 மனுக்கள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தும் நடவடிக்கைகளைத் தடுத்து எழுத்தாணை ஒன்றினை பிறப்பிக்குமாறு கோரி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனுவை விசாரணைக்கு ஏற்காமல், நிராகரிக்குமாறு கோரி இரு இடையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரான சட்டத்தரணி சுனில் வட்டகல, சோசலிச வாலிபர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எரந்த குணசேகர ஆகியோர் இந்த இடையீட்டு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

ஓய்வு பெற்ற இராணுவ கேர்னல் டப்ளியூ.எம்.ஆர். விஜேசுந்தர, இந்த எழுத்தாணை மனுவை 2

## தம்பியின் கத்திக் குத்தில் அண்ணன் உயிரிழந்தார்!

### தருமபுரம் கல்லாறில் சம்பவம்



தம்பியின் கத்தி குத்துக்கு இலக்காகி அண்ணன் உயிரிழந்த சம்பவம் கிளிநொச்சியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 11 மணியளவில் கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில் இடம்பெற்றுள்ளது. 2

## மின் கட்டண விலைச் சூத்திரம்: அமைச்சரவையில் அங்கீகாரம்!



மின்சாரக் கட்டணங்களுக்கான செலவுச் சீர்திருத்தத்துடன் கூடிய விலைச் சூத்திரத்தை தயாரிப்பதற்கான யோசனைக்கு நேற்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்றுப் பிற்பகல் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போதே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், உரிய விலைச் சூத்திரத்திற்கான முன்மொழிவை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்த பின்னரே, 2

## பொதுஜன பெரமுன – ஐ.தே.க. தேர்தல் கூட்டுக் குறித்து பேச்சு

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு இடையிலான புதிய அரசியல் கூட்டணி தொடர்பில் இரு அரசியல் கட்சிகளின் மாவட்ட தலைவர்களுடன் பேச்சு மேற்கொண்டு இவ்வாரத்தில் உத்தியோக பூர்வ தீர்மானத்தை எடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழ்ல்காட்டல் வழங்கியுள்ளார்.

இதற்கமைய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன விற்கு இடையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற விசேட சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, 2

# ரணிலிடமிருந்து நல்லெண்ண சமிக்ஞை வந்தால் மட்டுமே பேச்சைத் தொடரலாம்!

## தமிழ்க் கட்சிகளின் நேற்றைய கூட்டத்தில் வலியுறுத்து

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், ஜன.10

நில விடுவிப்பு, கைதிகள் விடுதலை போன்ற விடயங்கள் தொடர்பில் வெறும் வாய்ப்பந்தல் பேச்சுகளைத் தாண்டி, திட்டவட்டமான செயல் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் நல்லெண்ண சமிக்ஞைகளை ஜனாதிபதி செயலில் வெளிப்படுத்தினால் மட்டுமே தற்போதைய பேச்சைத் தொடர வேண்டும். இல்லையேல் இன்று ஒரு நாள் பேச்சுடன் விடயத்தை முடித்துக் கொள்வது நல்லது.

நேற்று மாலை கொழும்பில் இரா. சம்பந்தன் எம்.பியின் வீட்டில் நடைபெற்ற தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டதாக அறிய வந்தது.

இன்று 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையில் அரசுடனான தொடர் பேச்சுக்குத் தயாராகும் நிலையில் இதன்போது தமிழர் தரப்பில் அரசிடம் முன்வைக்க வேண்டிய விடயங்கள் தொடர்பில் நேற்றைய தினம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் 10

## கொங்கிறீட் தூண் வீழ்ந்ததில் மரணம்



புத்தளம் – மதுரங்குளி மல்லம்பிட்டிய பகுதியில் நேற்றுப் பகல் கொங்கிறீட் தூண் உடைந்து கீழே வீழ்ந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 10

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தால் நேற்றே அதற்கான பணியை மணி ஆரம்பித்து இருக்க முடியும். ஆனால் அவர் ஏதும் செய்யவில்லை. யாரோ செய்தியாளர் கேட்டமைக்கு அப்படி புதிய மேயர் தெரிவு என்ற தகவல் உறுதி இல்லை, அது தொடர்பான வர்த்தமானி உண்மையில் வந்தால் பார்க்கலாம் என்ற சாரப்பட மழுப்பல் பதிலளித்துவிட்டு நழுவி இருக்கின்றார் அவர். கடந்த ஆறாம் திகதியிடப்பட்ட அந்த வர்த்தமானியின் இலக்கம் 2313/61. இனி, அதைக் கொழும்பில் தேடி எடுத்துக் கொள்வது அவர் வேலை.

எனக்கு என்னவோ அவர் தடை கேட்டு வழக்குக்குப் போக மாட்டார் என்று தோன்றுகின்றது. மாறாக, புதிதாகப் பிறந்திருக்கும் அரசியல் கூட்டுக்களின் சாதகத்தில், திரும்பவும் எஞ்சிய காலத்திற்கு மேயராவதற்கான முயற்சியை மட்டுமே அவர் மேற்கொள்வார் என்று எண்ணுகிறேன்.

ஏற்கனவே, அவர் விக்கியின் கட்சியில் சங்கமமாகி விட்டிருக்கின்றார். இன்று சில வேளைகளில் புளொட்டும் ரெலோவும், தமிழரசுக் கட்சி தலைமையிலான கூட்டமைப்பிலிருந்து வெளியேறும் சாத்தியங்கள் தென்படுகின்றன.

அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் ரெலோ, புளொட் என்பனவும், விக்கியின் கூட்டணியில் சங்கமம் ஆகும். அந்தப் பின்புலத்தில் யாழ் மாநகர சபையில் கூட்டமைப்பின் பட்டியலில் உறுப்பினர்களாக இருக்கும் ரெலோ, புளொட் உறுப்பினர்கள் தமக்கு ஆதரவு தருவர் என மணி கணக்கெடுக்கின்றார். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் இப்போது வரக்கூடிய மாநகர மேயர் தேர்வில் தாம் முன்னிலையில் வரக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாகவும் அவர் கருதுகிறார் என்று அவரது பக்கத்தில் ஒருவர் தகவல் சொன்னார்.

ஆகவே மீண்டும் எஞ்சிய காலத்துக்கு மேயராவதற்கு வாய்ப்பு இருந்தால் அதற்காக மணி காய் நகர்த்துவாரே தவிர, மேயர் தெரிவுக்கு எதிராக 'மினக்கெட்டு' தடை வாங்கும் வீண் முயற்சிக்கு அவர் போக மாட்டார் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

***

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று காலை கொழும்பில் சம்பந்தன் ஐயா வீட்டில் நடக்கின்றது. Make or break என்ற மாதிரி, கூட்டமைப்பின் வாழ்வும் சாவும் இன்றைய கூட்டத்தில் முடிவாகப் போகின்றது.

நேற்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் நடந்தது. தேசியப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணிலின் தரப்பில் வெளியிடப்பட்ட தகவலின் பிரகாரம் கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று 10 ஆம் திகதி மற்றும் 11, 12,13 ஆகிய நான்கு நாள்கள் மாலையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் இப்போது இன்று பத்தாம் திகதி நடக்கும் கூட்டத்திற்குத்தான் கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு வந்திருப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது.

இன்றைய கூட்டத்தின் போக்கைப் பார்த்து நாளைய மற்றும் அடுத்தடுத்த நாள்களுக்கான கூட்டம் குறித்து அங்கு வைத்து அறிவிக்கலாம் என்று அரசுத் தலைமை முடிவு செய்ததோ, என்னவோ...!

12,13 ஆம் திகதிகளில் இந்தியாவில் நடைபெறும் கூட்டம் ஒன்றுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க செல்ல வேண்டிய ஏற்பாடு இருப்பதால்தான் 11,12,13 ஆம் திகதிக் கூட்டம் பற்றி முற்கூட்டியே அறிவிக்கப்படவில்லை என்று சில தரப்புகள் சமாதானம் கூறின.

ஆனால் இந்தியாவில் அந்த நிகழ்ச்சி 12,13 ஆம் திகதிகளில் நடைபெறும் போது அதில், இலங்கையில் இருந்தபடியே காணொலி மூலம் இலங்கை ஜனாதிபதி பங்கு பெறுவார் என்று இப்போது கூறப்படுகின்றது. ஆகவே 11,12,13 ஆம் திகதிகளின் மாலையில் சர்வ கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெறுவதில் எந்த பாதிப்பும் இல்லை என்றே தெரிகின்றது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியா செல்கின்றார் என்றுதான் ஆரம்பத்தில் செய்தி வெளியிடப்பட்டது. இன்றைய 'காலைக்கதிர்' கூட அப்படி ஒரு செய்தியை 11 ஆம் பக்கத்தில் தாங்கித்தான் வெளிவருகிறது.

11,12,13 ஆம் திகதிகளிலும் இந்தக் கட்சித் தலைவர்களின் கூட்டம் தொடர்ந்து நடைபெறுமா என்பது இன்று மாலையில் தான் தெரியும். அப்போது பார்க்கலாம்.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றாகத் தொடருமா, ஜனாதிபதி ரணில் கூட்டிஉள்ளசர்வகட்சிக்கூட்டம் இன்றைக்குப் பின்னரும் தொடருமா என்பவை பற்றிய செய்திகள் – முடிவுகள் – இன்று வெளியாகும் என உறுதியாக நம்பலாம்.

- மின்னல் -

## மணிவண்ணன் அணி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையிலான அணியினர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனை நல்லூர் ஆலய வீதியில் உள்ள அவரது இல்லத்தில் சென்று நேற்று மாலை சந்தித்தனர்.

இச் சந்திப்பில் என்ன பேசினீர்கள், என்னமுடிவுஎட்டப்பட்டதுஎனக்கேட்டபோதே நீதியரசர்சி.வி.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்கமைய எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வி.மணிவண்ணன் உள்ளிட்டவர்கள் தமிழ் மக்கள் கூட்டணியில் இணைந்து போட்டியிடுவார்கள் என அவர் தெரிவித்தார்.

## முன்னாள் போராளி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுக்குடியிருப்பில் முன்னாள் போராளி ஒருவர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். வேலுப்பிள்ளை மாதவ மேயர் என்ற முன்னாள் போராளியே, புது குடியிருப்பு நகர் பகுதியில் வீதியோரத்தில் தமிழ் தேசியத்தின் நிரந்தர தீர்வுக்காக தமிழ் தேசியத்தை நேசிக்கும் கட்சிகள், அமைப்புகள், தனி மனிதர்கள் அனைவரும் ஒன்று படவலியுறுத்தி உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

## பொற்பதி வீதியின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதைக்கப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் இடத்தில் நேற்று அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டது. எனினும் எதுவித ஆயுதங்களும் கிடைக்காத நிலையில் அகழ்வுப் பணிகள் கைவிடப்பட்டது.

நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ் நீதவான் நீதிமன்ற பதிவாளர் சுந்தர மூர்த்தி பிருந்தாவின் தலைமையில் கோப்பாய் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஆரிய பந்து வெதகெர, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் யருள் ஆகியோரின் மேற்பார்வையில் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகின. இதன்போது பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

நான்கு இடங்களில் அகழ்வு மேற்கொள்ளப்பட்டபோதும் எதுவித ஆயுதங்களும் மீட்கப்படவில்லை.

அகழ்வுப் பணிகள் இடம்பெறும் இடத்திற்கு அருகிலேயே விடுதலைப் புலிகளினுடைய பிரதித் தலைவராக இருந்த மாத்தையாவினுடைய முகாம் மற்றும் விடுதலைப் புலிகளினுடைய சட்ட, மருத்துவக் கல்லூரியும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தலுக்கு எதிரான ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(ரிட் மனு) கடந்த 3ஆம் திகதி தாக்கல் செய்த நிலையில், அந்த மனு எந்த சட்ட அடிப்படைகளையும் கொண்டதல்ல என்பதை சுட்டிக்காட்டியே அதனை நிராகரிக்குமாறு இந்த இடையீட்டு மனுக்கள் ஊடாகக் கோரப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த ரிட் மனுவை முன் கொண்டு செல்ல தேவையான, நியாயமான சட்ட அடிப்படை உள்ளது என்பதை மனுதாரர் நிறுவத் தவறியுள்ளார் என்று இடையீட்டு மனுதாரர்கள் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த ரிட் மனுவின் மூலம் தவறான தகவல்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன எனவும் இடையீட்டு மனுதாரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அதனால், இடையீட்டு மனுதாரர்கள், சம்பந்தப்பட்ட ரிட் மனு பரிசீலனையின் போது வாதங்களை தாங்கள் முன்வைக்க அனுமதிக்க வேண்டும் எனவும், ரிட் மனுவை விசாரணைக்கு ஏற்காமல் நிராகரிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

தேர்தலை நடத்த வேண்டாம் எனக் கோரித்தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவில், பிரதிவாதிகளாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா உள்ளிட்ட உறுப்பினர்கள், பிரதமர், நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்டோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

## தம்பியின் கத்திக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகோதரர்களிற்கிடையில் தொலை பேசியால் ஏற்பட்ட முரண்பாட்டினால், அண்ணனை தம்பி கத்தியால் குத்தியுள்ளார் என்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் அண்ணன் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் 37 வயதுடைய தருமராசா தவசீலன் எனும் 3 பிள்ளைகளின் தந்தையை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## மின் கட்டண விலைச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனக்கலந்துரையாடப்பட்டுள்ளது.

மின்சாரக்கட்டணதிருத்தம்தொடர்பான யோசனை நேற்று மாலை தனக்குக் கிடைத்ததாகபொதுபயன்பாடுகள்ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## பொதுஜன பெரமுன - .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாகல காரியவசம். ரவி கருணாநாயக்க, பாலித ரங்கே பண்டார, ருவான் விஜேவர்தன மற்றும் அகில விராஜ் காரியவசம் ஆகியோரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே. ரோஹித அபேகுணவர்தன, சஞ்ஜீவ எதிரிமன்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாட்டின் தற்போதைய நிதி நிலைமை, சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னெடுக்கப்படும் பேச்சுகள், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் உள்ளிட்ட அரசியல் விடயங்கள் தொடர்பில் இந்தப் பேச்சில் அவதானம் செலுத்தப்பட்டது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மொட்டு சின்னத்தில் போட்டியிட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தீர்மானம் தொடர்பில் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெரும்பாலான தேர்தல் தொகுதியில் மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுமாறு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)






காலைக்கதிர் Kalaikkathir

# முள்ளியவளை மாவீரர் துயிலுமில்ல பணிக்குழு உறுப்பினர்கள் ஆறு பேரிடம் தீவிர விசாரணை!

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழு உறுப்பினர்கள் 6 பேரை முள்ளியவளை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த பொலிஸார் அந்த உறுப்பினர்களிடம் நேற்று (திங்கட்கிழமை) வாக்குமூலம் பதிவு செய்தனர்.

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழு உறுப்பினர்களான கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் கமலநாதன் விஜிந்தன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான சின்னராசா லோகேஸ்வரன், திருச்செல்வம் இரவீந்திரன், தவராசா அமலன், சமூக செயற்பாட்டாளர்களான ஞானதாஸ் யூட் பிரசாந்த், பாஸ்கரன் வனஜன் ஆகியோரிடமே வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

பணிக்குழு உறுப்பினர்கள் ஆறு பேரையும் நேற்று பொலிஸ் நிலையம் வருமாறு பொலிஸார் வீடுகளுக்கு சென்று அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்நிலையில் மேற்படி ஆறு பேரும் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில், கடந்த நவம்பர் 27 ஆம் திகதி நடைபெற்ற மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் தொடர்பாக வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

குறிப்பாக, மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுக்காக முதல் நாள் 26ஆம் திகதி மாங்குளம், முல்லைத்தீவு வீதியில் மாவீரர் துயிலும் இல்ல வாசலில் அமைக்கப்பட்ட வளைவில், தமிழீழ வரைபடம், துப்பாக்கி, மாவீரர்கள் சிலரது படங்கள் காணப்பட்டமை தொடர்பிலேயே வாக்குமூலத்தை பதிவுசெய்துள்ளதாக தெரிவித்தனர். இந்த விடயம் தொடர்பில் பணிக்குழு உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கையில் –

ஏற்கனவே 2019 ஆம் ஆண்டு நாம் நினைவேந்தல் நிகழ்வை நடத்தியபோது இதே வளைவே இருந்தது. அது தொடர்பில் எந்த விடயமும் எங்களுக்குத் தெரியப்படுத்தவில்லை.

ஆகவே, அதே வளைவையே நாம் இம்முறையும் அமைத்தோம்.

குறிப்பாக, மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுக்காக 26 ஆம் திகதி மாங்குளம், முல்லைத்தீவு வீதியில் துயிலும் இல்ல வாசலில் அமைக்கப்பட்ட வளைவில் தமிழீழ வரைபடம், துப்பாக்கி, மாவீரர்கள் சிலரது படங்கள் முதலான சின்னங்களை காலை 8.30 மணிக்கு முன்னரே நாங்கள் அகற்றுவதற்கு இணக்கம் தெரிவித்து, இரவே அந்த சின்னங்களை தீந்தை பூசி மறைத்திருந்தோம்.




எனினும், அதனை மாற்றம் செய்து மறைக்கும் முன்னர் பொலிஸார், அந்த சின்னங்களை அகற்றி, அவற்றை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றுவிட்டனர். அதுதான் நடந்தது. – எனக் கூறினர். இந்த விடயம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்கு பதிவுசெய்துள்ள நிலையிலேயே மேற்படி நபர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்வதாகவும், மேலதிக நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன எனவும் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஆண்டுக்கு இருமுறை இடம்பெறும் ஐ.நா. தொடரால் தமிழர்களுக்கு எந்த நன்மையையும் கிடைக்கவில்லை

### திருமாவளவன் கவலை



ஐ.நா. கூட்டத்தொடர் ஆண்டுக்கு இரண்டு தடவைகள் நடைபெற்றாலும், அதன் மூலம் இதுவரை ஈழத் தமிழர்களுக்கு எவ்விதமான தீர்வும் கிட்டவில்லை என திருமாவளவன் கவலை வெளியிட்டுள்ளார்.

13 ஆவது திருத்தத்தின் படி, முழுமையான அதிகாரப் பரவலாக்கத்தை நடைமுறைப் படுத்த தமிழகத் தலைவர்கள் மூலமாக மாநில, மத்திய அரசாங்கங்களைக் கோரும் விசேட மாநாடொன்று சென்னையில் நடைபெற்றது.

இந்த மாநாட்டின் பின்னர் சென்னை பத்திரிகையாளர் மன்றில் நடைபெற்ற ஊடகசந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.


பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் ஈழத்தமிழர்களின் விவகாரத்தில் கொள்கை மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் கடந்த எட்டு ஆண்டுகளில் ஈழத்தமிழர்களின் விடயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை எனத் தொல்.திருமாவளவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம், ஐ.நாவில் சிங்கள, பௌத்த அரசுக்கு எதிராக வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது, இந்தியா அதில் பங்கேற்கவில்லை என்றும் இந்தியா, தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்திருக்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சிங்கள, பௌத்த பேரினவாத அரசாங்கத்துக்கு ஆதரவாகச் செயற்படும் போக்கைக் கைவிட்டு ஐ.நாவிலும் இதர தளங்களிலும் இந்தியா தமிழர் ஆதரவு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்றும் அவர் இந்திய அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் சிங்கள மயமாதலில் இருந்தும் தமிழர்களின் கைகளில் இருந்து பறிபோவதை தடுக்கவும் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கும் தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

## அரசு தொடர்ந்தும் ஆணவத்துடன் இருக்கின்றமை வேதனையளிக்கிறது!

### கம்யூனிஸ்ட் கட்சி தமிழகத் தலைவர் சி.மகேந்திரன் தெரிவிப்பு



முள்ளிவாய்க்கால் படுகொலை இடம்பெற்று அதில் லட்சக்கணக்கான மக்கள் இறந்தபின்னரும் இலங்கை அரசாங்கம் ஆணவத்துடன் இருக்கின்றமை மிகவும் வேதனை அளிப்பதாக கம்னியூனிஸ் கட்சியின் தமிழகத் தலைவர் சி.மகேந்திரன் கவலை வெளியிட்டுள்ளார்.

தற்காலிக நடைமுறையாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் இதற்கு இந்திய அரசாங்கம் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

13 ஆவது திருத்தத்தின் படி, முழுமையான அதிகார பரவலாக்கத்தை நடைமுறைப்படுத்த தமிழகத் தலைவர்கள் மூலமாக மாநில, மத்திய அரசாங்கங்களைக் கோரும் விசேட மாநாடொன்று சென்னையில் நடைபெற்றது.

இந்த மாநாட்டின் பின்னர் சென்னை பத்திரிகையாளர் மன்றில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

## வங்கிகளின் ஏ.ரி.எம். இயந்திரங்களில் பணம் திருட்டு: மீஹதென்னை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கைது!

வங்கிகளின் ஏ.ரி.எம். இயந்திரங்களில் பணம் திருடப்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மீஹதென்னை பொலிஸ் நிலைய நிர்வாக பகுதி பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டார் எனக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஹிக்கடுவ, பத்தேகம, காலி, கராப்பிட்டிய ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள அரச வங்கிகள் பலவற்றின் கணினியை ஊடுருவி பெருந்தொகையான பணத்தை வெளிநாட்டவர்கள் இருவர் திருடியதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், அவர்களை கைதுசெய்து முன்னெடுக்கப்பட்ட விரிவான விசாரணைகளையடுத்தே மீஹதென்னை பொலிஸ் நிலைய நிர்வாகப் பகுதி பொறுப்பதிகாரி சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேற்படி பொலிஸ் பரிசோதகர் பிடிகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அமுகொட பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## தமிழரசு பிரிந்து சென்றால் ஏனைய தமிழ் தரப்புக்களை கூட்டமைப்பில் இணைப்போம்!

### ரெலோ ஆக்ரோஷம்



இலங்கைத் தமிழரசு கட்சி தனித்து போட்டியிடுமாக இருந்தால், ஏனைய தமிழ் கட்சிகளை இணைத்து பலமான கூட்டணியாகக் களமிறங்குவோம் என ரெலோ அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும் கூட்டமைப்பில் உள்ள மற்றைய கட்சிகளும் தனித்து போட்டியிட வேண்டுமெனக் கூறுவதற்கு தமிழரசு கட்சிக்கு எந்த அருகதையுமில்லை என்றும் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசு கட்சி தனித்து போட்டியிடத் திட்டமிட்டுள்ள நிலையில் ரெலோவின் செயலாளர் நாயகம் கோவிந்தம் கருணாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழரசு கட்சி தனித்து போட்டியிடுமாக இருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற கட்சிகளையும் ஏனைய தமிழ்க் கட்சிகளையும் இணைத்து ஒரு பலமான கூட்டணியை உருவாக்குவோம். – என்றார்.

எமது உரிமைகளை வென்றெடுக்கவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை ஒரு கட்டமைப்பிற்குள் கொண்டு வந்து பலமான ஒரு கூட்டணியை உருவாக்குவோம் என்றும் கோவிந்தம் கருணாகரன் தெரிவித்தார்

## வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக மஹிந்த குணரட்ண கடமைகளை பொறுப்பேற்றார்!



வடமாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபராக மஹிந்த குணரட்ண தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

நேற்று (திங்கட்கிழமை) காலை 11.21 மணியளவில் சுபநேரத்தில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் அமைந்துள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் கடமைகளை பொறுப்பேற்றார். வடமாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய, மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் சப்ரகமுவ மாகாணத்துக்குப் பொறுப்பான பதில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக இருந்த மஹிந்த குணரட்ண வட மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கொடூரத்தின் நினைவுநாள்

தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை சம்பவத்தின் 48 ஆவது நினைவுதினம் இன்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

1974ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதியில் ஏற்பட்ட கலவரத்தில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

உலகலாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப்போதைய சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசு, அங்கு பொலிஸாரை அனுப்பி கலவரத்தை ஏற்படுத்திக் குழப்பியது. இதன்போது ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழர்கள் மனத்தில் நீங்காத வடுக்களாக இந்தப் படுகொலைச் சம்பவம் பதியப்பட்டுள்ளது.

மாநாட்டில் பங்குபற்ற வந்திருந்த வெளிநாட்டு அறிஞர்களை வழியனுப்புவதற்கான நிகழ்வு யாழ் திறந்தவெளி அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கையில், அப்போதைய யாழ் மேயர் அல்பிரட் துரையப்பா தலைமையிலான மாநகர நிர்வாகம் திறந்த வெளி அரங்கை மூடித் திடீரென அனுமதி மறுத்தமையால் அந்நிகழ்வு வீரசிங்க மண்டபத்தின் முன் நடைபெற்றது. வழியனுப்பு விழாவிற்குத் திரண்டு வந்திருந்த ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட ஆர்வலர்களை, மண்டத்தில் உள்ளடக்க இயலாத நிலையில் மண்டபம் முன்பாக அதற்கும் தெருவிற்கு இடைப்பட்ட நிலத்தில் நிறுவப்பட்ட திடீர் மேடையில் வழியனுப்பு விழா ஆரம்பமாக, தெருவிற்கு மறுபக்கத்தில் புல்தரையில் உட்கார்ந்து விழா நிகழ்ச்சிகளைப் பார்வையாளர்கள் அவதானித்துக் கொண்டிருந்தனர். போக்குவரவுக்குத் தெரு மூடப்பட்டிராத போதும் மேடைக்கும் பொது மக்களுக்கும் இடையே பயணிக்க வேண்டாமென்று இரு புறத்தும் பணி புரிந்த தொண்டர்களால் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளப்பட்டதன் பேரில், ஊர்திகள் யாவும் மாற்றுப் பாதையையே உபயோகித்தன.

அதனையொரு சாட்டாக எடுத்துக் கொண்டு, அப்போதுதான் அனுராதபுரத்தில் இருந்து வந்தடைந்த கலகம் அடக்கும் பொலிஸார் பார்வையாளர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டனர். விழா நிகழ்வுகளை அமைதியாக செவிமடுத்து கொண்டிருந்த அப்பாவிப் பொது மக்கள் மீது காரணமின்றி கலகம் அடக்கும் பொலிஸார் குண்டாந்தடியடிப் பிரயோகம் செய்து, வகை தொகையின்றி கண்ணீர்குண்டுகளையும் எய்து உச்சவலு மின் கம்பிகள் அறுந்து விழும்படியாக துப்பாக்கிக் குண்டுகளையும் தீர்த்தனர். சம்பவித்த அசம்பாவிதத்தால் நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர். பெண்களும் பிள்ளைகளும் நெரிசலில் மிதிபட்டுக் காயமடைய நேரிட்டது. அநேகர் உடுத்த உடைகளையும் இழக்க நேரிட்டது. உச்சவிசை மின் கம்பிகளில் சிக்குண்ட ஒன்பது தமிழர்பதைக்கபதைக்கபடுகொலைசெய்யப்பட்டனர்.

அந்த அரச கொடூரத்தின் நினைவு நாளே இன்று.

# கொழும்பைச் சுற்றியுள்ள பல பகுதிகளுக்கு போதைப்பொருள் விநியோகித்த மூவர் கைது!

கொழும்பை சுற்றியுள்ள பல பகுதிகளுக்கு போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்ட மூவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களனி, களுத்துறை, பாணந்துறை, நுகேகொட உள்ளிட்ட பல பிரதேசங்களுக்கும் இவர்கள் ஹெரோயின், கஞ்சா மற்றும் ஹசிஸ் போதைப் பொருள்களை விநியோகித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்ட போது, 7 கோடி ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியான போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் கொட்டாஞ்சேனை, வத்தளை மற்றும் திக் ஓயா ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

# சமூக ஊடகங்களுக்கு கட்டுப்பாடு விதிப்பதற்கு அரசு நடவடிக்கைகள்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு



சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்காக சட்ட ஆணைக்குழுவால் முன் மொழியப்பட்ட புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மத நம்பிக்கைகளுக்கு அவதூறு தெரிவிக்கும் வகையில் கருத்து வெளியிடப்பட்டதை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய அமைதி மற்றும் இன நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்த திட்டமிட்டுள்ள சீர்குலைவைத் தடுக்கவே இந்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம். - என்றார்.

மதத் தலைவர்களை அவமதிக்கும் வகையிலும் இன நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலும் சிலர் சமூக ஊடகங்களில் பதிவுகளை இட்டு வருகின்றனர்.

இதனை தடுப்பதற்கே சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

# ஜனாதிபதிக்கும் தனக்கும் இடையில் தனிப்பட்ட முரண்பாடுகள் கிடையா!

## மைத்திரி இப்படிக் கருத்து



ஜனாதிபதிக்கும் தனக்கும் இடையில் தனிப்பட்ட முரண்பாடுகள் கிடையா என்றும் கொள்கை ரீதியில் மாத்திரம் வேறுபாடுகள் காணப்படுகின்றன எனவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் பண்டாரநாயக்கவின் கொள்கைகளை செயற்படுத்த முனைந்ததால் முரண்பாடுகள் தோற்றம் பெற்றன என்றும் அவர் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியில் இடம்பெற்ற பண்டாரநாயக்கவின் 124 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு பண்டாரநாயக்கவின் கொள்கையுடன் தீர்வு காண முடியும் என மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

இதேநேரம் இளம் தலைமுறையினர் பண்டாரநாயக்கவின் கொள்கைகளை அறியாமல் இருக்கின்றமை பிறிதொரு பிரச்சினை என்றும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார்.

# சுன்னாகத்தில் வாள்வெட்டு இளைஞன் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், சுன்னாகம், மயிலங்காடு பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஏழாலை தெற்கை சேர்ந்த குலசிங்கம் சூரியகுமார் என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் கொண்ட வன்முறை கும்பல் ஒன்றே தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பி சென்றுள்ளது. சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# 3 மாகாணங்களில் மட்டும் முட்டைகள் 53 ரூபாவுக்கு!

3 மாகாணங்களில் முட்டைகள் தலா 53 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன என முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களுக்கு சென்று முட்டைகளை விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக அதன் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஆனால், சந்தையில் முட்டை 55 ரூபாவுக்கு வாங்க முடியாத நிலை இருப்பதாக மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். இதேவேளை, முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான கேள்விகோருவதற்கு நிதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா வைத்தியசாலை ஊழியர்கள் போராட்டம்!



வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை சிற்றூழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று (திங்கட்கிழமை) காலை வைத்தியசாலை நுழைவாயில் முன்பாகக் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், முறையற்ற நியமனத்தை வழங்குவதை நிறுத்து, வாழ்வாதாரத்தை அதிகரி, வங்கியில் அதிகரித்த வட்டி வீதத்தைக் குறை, ஊழியர் பற்றாக்குறையை உடன் நிவர்த்தி செய் போன்ற பல்வேறு வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.



போராட்டத்தின் இறுதியில் பேரணியாக வைத்தியசாலை நுழைவாயிலிலிருந்து சென்று மணிக்கூண்டு சந்தியூடாக மீண்டும் வைத்தியசாலை ஊழியர் நுழைவாயிலை வந்தடைந்திருந்தனர்.




## இரத்தினக்கல் ஆபரண கண்காட்சி கொழும்பில்!



இரத்தினக்கல் ஆபரணக் கண்காட்சி ஒன்று கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் கடந்த மூன்று நாள்களாக இடம்பெறுகின்றது.

கைத்தொழில்கள் பெருந்தோட்ட அமைச்சா டாக்டா ரமேஸ் பத்திரன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கடந்த 7 ஆம் திகதி கண்காட்சியைத் திறந்து ஆரம்பம் செய்து வைத்தார்.

50க்கும் மேற்பட்ட இரத்தினக்கல் விற்பனைக் காட்சிக் கூடங்களைக் கொண்டிருக்கின்ற இந்த இரத்தினக்கல் ஆபரணக் கண்காட்சி, கடந்த 7 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி, இன்று (8) ஞாயிற்றுக் கிழமையும், நாளை 9 ஆம் திகதி திங்கட்கிழமை வரை 3 நாள்கள் சர்வதேச இரத்தினக்கல் ஆபரணக் கண்காட்சியாக இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி சபைத் தேர்தலில் புதியவர்களுக்கு முன்னுரிமை!

### பாலித ரங்கே பண்டார உறுதி



எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி நாடளாவிய ரீதியில் தனித்து போட்டியிடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் விவரங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிடுவதற்கு சில உள்ளூராட்சி சபைகள் இணக்கம் தெரிவித்துள்ளன எனத் தெரிவித்த அவர் அவ்வாறு இல்லாத உள்ளூராட்சி சபைகளில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து போட்டியிடும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் திறமையான புதியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு தற்போது வேட்பாளர்களின் பெயர் விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகள் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இன்று!



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஒழுங்கமைப்பில் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகள் 49 ஆவது நினைவுதினம் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக உள்ள நினைவுத் தூபியில் நடைபெற உள்ளது.

இந்த நினைவு நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள், தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள், படுகொலையுண்டவர்களின் உறவினர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்கு வருகைதருபவர்கள் அஞ்சலி செலுத்துவதற்கு மலர் மாலைகள், பூக்கள் என்பவற்றைக் கொண்டுவரும்படி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி தினமான ஜனவரி 10, 1974 இல் மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் ஒன்பது அல்லது பதினொரு பேர் இலங்கை பொலிஸாரின் துப்பாக்கிச்சூடு உட்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் ஏற்படுத்திய குழப்ப நிலையால் மரணம் அடைந்தனர்.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டால் மின்கம்பிகள் அறுந்து மக்கள் திரண்டிருந்த இடத்தில் விழுந்தமை, ஆயிரக்கணக்கில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எனத் திரண்டிருந்த மக்கள் மத்தியில் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியமை, இரவு நேரத்தில் ஏற்பட்ட குழப்பத்தால் நிகழ்ந்த வாகன விபத்துகள், இந்தக் குழப்பங்களால் ஏற்பட்ட அதிர்ச்சியில் ஏற்பட்ட இதய வலி என்பன இந்த மரணங்களுக்குக் காரணமாயின. இந்த இறப்புகள், பின்னர் தீவிரமாக வெளிப்பட்ட தமிழ்த் தேசியவாத போக்குக்கு உந்திய ஒரு முக்கிய துன்பியல் நிகழ்வு ஆகும்.



## இத்தாலி விபத்தில் சிக்கி இலங்கை இளைஞன் பலி!

இத்தாலியின் நாபோலி நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் 20 வயதுடைய இலங்கை இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கடந்த சனிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

18 வயதுடைய இலங்கையை சேர்ந்த இளைஞரே உயிரிழந்தவராவார்.


மோட்டார் சைக்கிளும் காரும் மோதிக்கொண்டபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

## சிறைச்சாலைக் கைதிகளால் தாக்கப்பட்டார் சேபால் அமரசிங்க விசாரணைகளை ஆரம்பித்தது மனித உரிமைகள் ஆணைக்குழு!

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சமூக செயற்பாட்டாளர் சேபால் அமரசிங்க மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அதன்படி, குறித்த ஆணைக்குழுவின் அதிகாரிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு விளக்கமறியல் சாலையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனச் சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சேபால் அமரசிங்க, சிறைச்சாலையில் உள்ள சில கைதிகளால் தாக்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது. எவ்வாறாயினும், அவரை தாக்கியவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.



ஸ்ரீ தலதா மாளிகையை அவமதித்த சம்பவம் தொடர்பில் சேபால் அமரசிங்க கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# எல்.ஈ.டி. மூலம் ஒளிரும் இந்திய தேசம் குறைந்த செலவில் நிறைந்த பிரகாசம்!

## ஆற்றலின் திறமையான பயன்பாட்டை ஊக்குவிக்கும் உஜாலாத் திட்டம் அமுல்

**உஜாலாத் திட்டத்தின் கீழ் எல்.ஈ.டி. விளக்குகள் விநியோகம் மற்றும் விற்பனையின் 7 ஆண்டுகளை இந்திய மின்சாரத்துறை அமைச்சகம் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. குறைந்த செலவில் எல்.ஈ.டி. விளக்குகள் வழங்கும் உஜாலா திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி தொடங்கி வைத்தார். குறுகிய காலத்தில் இது மிகப் பெரிய திட்டமாக மாறி, அதிகளவிலான மின்சார பயன்பாட்டை குறைத்தது. தற்போது வரை, நாடு முழுவதும் 36.78 கோடி எல்.ஈ.டி. விளக்குககள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் வெற்றி, லட்சக்கணக்கான மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தியது. உஜாலா திட்டம் ,ரூ.300 முதல் ரூ.350 வரை விற்கப்பட்ட எல்.ஈ.டி. விளக்குகளின் சில்லறை விற்பனை விலையை ரூ.70 முதல் 80 ஆக குறைத்து வெற்றி கண்டது. இத்திட்டம் மின்சாரத்தை அதிகளவில் சேமிக்க வழிவகுத்தது. தற்போது வரை, ஆண்டுக்கு 47, 778 மில்லியன் கிலோவாட் மின்சாரம் சேமிக்கப்படுகிறது. அதோடு கார்பன் உமிழ்வும் 3.86 கோடி தொன் குறைக்கப்பட்டது. உஜாலா திட்டத்தை அனைத்து மாநிலங்களும் உடனடியாக பின்பற்றின. இதன் மூலம் வீட்டு மின்சார கட்டணம் குறைந்தது. இதனால் நுகர்வோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத் தியதுடன், பணத்தையும் சேமிக்க முடிந்தது.**




இந்தியாவில் 'உஜாலா' – UJALA (அனைவருக்கும் மலிவு விலையில் எல்.ஈ.டி. மூலம் உன்னத் ஜோதி) திட்டம், ஆற்றல் – திறனுள்ள உபகரணங்களைப் பயன் படுத்தி குடியிருப்பு மட்டத்தில் ஆற்றலின் திறமையான பயன்பாட்டை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண் டுள்ளது மற்றும் அதிக ஆரம்ப செலவுகளைக் குறைக்க




தேவையை ஒருங்கிணைக்கிறது.

எல்.ஈ.டி. அடிப்படையிலான உள்நாட்டு திறமை யான விளக்கு திட்டம் (DELP) என்றும் அறியப்படு கிறது. இது உலகின் மிகப்பெரிய திட்டமாக கருதப்படுகிறது.

அதிகரித்து வரும் எரிசக்தி கட்டணங்கள் மற்றும் ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள போரின் விளைவாக ஏற் படும் நெருக்கடிகளால், எரிபொருள் மற்றும் ஆற்றலுக் காக மற்ற பல நாடுகளைச் சார்ந்திருக்கும் இந்தியா போன்ற ஒரு தேசம் உலக அரங்கில் தன்னைத் தன் னிறைவு பெற்ற வீரராக நிலைநிறுத்துவது மிகவும் முக்கியமானது.

இந்திய அரசு, நாட்டில் இந்த ஆற்றல் புரட்சியை ஏற்படுத்துவதற்கான அதன் முயற்சியில், நாட்டின் மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவை யான போதுமான உள்கட்டமைப்பைக் கட்டியெழுப்பு வதற்கு முதன்மையான முன்னுரிமை அளித்தது.

நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் மின்சாரம் வழங்குவதற்கான சௌபாக்யா யோஜனா திட்டத்தின் ஒரு பகுதியாக, UJALA திட்டம் மூலம் குறைந்த ஆற்றல் நுகர்வுக்கு ஏற்பாடு செய்ய இந்திய அரசு முடிவு செய் துள்ளது.

எந்தவொரு உற்பத்தி அமைப்பு, கல்வி நிறுவனம், பாதுகாப்பு மற்றும் இணைப்புத் துறைகளில் விளக்கு களின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, ஆற் றல் – திறனுள்ள விளக்குகளின் விலை மற்றும் நிலைத் தன்மை நன்மைகளை அங்கீகரிக்கும் வகையில் இந்தத் திட்டம் 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

எட்டு ஆண்டுகளில், கிட்டத்தட்ட 37 கோடி எல்.ஈ.டி. பல்புகள், 72 லட்சம் டியூப் லைட்டுகள் மற்றும் 23.5 லட்சம் ஆற்றல் திறன் கொண்ட மின்விசிறிகள் விநி யோகம் செய்யப்பட்டு, ஆண்டுக்கு 20,000 கோடி ரூபாய் இந்தியப் பணத்தில் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய எல்.ஈ.டி. விநியோகத் திட்டமா கப் போற்றப்படும் இந்தத் திட்டத்தின் மூலம், பசுமை யான மற்றும் தூய்மையான சூழலைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் ஆற்றல் செயல்திறனை மேம்படுத்த முடிந்தது.


மதிப்பீடுகளின்படி, ஆண்டுக்கு 48.3 பில்லியன் கிலோவாட் மணிநேர மின்சாரத்தை மிச்சப்படுத்துகிறது, இந்தத் திட்டம் உலகச் சுற்றுச் சூழல் மாநாடான COP27 இல் இந்திய பிரதிநிதிகளால் முன்மொழியப்பட்ட வாழ்க் கைக்கான மந்திரத் திட்டத்தின் (சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை) என்ற பின்னணியில் உள்ள யோச னையை மேலும் நடைமுறைப்படுத்தியுள்ளது.

ஆண்டுக்கு 3.9 மில்லியன் மெட்ரிக் தொன் கார் பன்டை ஆக்சைடு வெளியேற்றம் இருப்பதாக மதிப் பிடப்பட்டுள்ளது, இது ஒவ்வொரு ஆண்டும் சுமார் 4.7 மில்லியன் கார்களை சாலையில் இருந்து அகற்றுவதற் குச் சமம்.

தனிநபர் மற்றும் வீட்டு மட்டத்தில் செலவு – பயன் பகுப்பாய்வின் அடிப்படையில், சராசரி சாதாரண இந்தி யரின் மின்சாரக் கட்டணத்தில் 15 சதவிகிதம் குறைக் கப்படுவது மிகவும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையா கும். இந்த குறைந்த விலை மற்றும் சிக்கனமான எல். ஈ.டி. பல்புகள், மின்சாரக் கட்டணத்தில் ஆண்டுதோறும் சுமார் ரூ.19,300 கோடியை சாதாரண மக்களுக்கு வெற்றிகரமாகச் சேமிக்கின்றன.

ஆற்றல் திறன் சேவைகள் லிமிட்டெட் (எனர்ஜி எபி ஷியன்சி சர்வீசஸ் லிமிடெட் – EESL) மூலம் செயல்படுத்தப் படும் இந்த திட்டத்திற்கு 'பிரகாஷ் பாதை' என்றும் பெய ரிடப்பட்டுள்ளது.

2014 – 2015க்கு முன், மின் தேவை குறைந்தாலும், காலாவதியான பல்புகளை பயன்படுத்தியமையால்,




மின் கட்டணம் அதிகமாக இருந்தது. சக்தியைக் குறைக்கும் தீர்வு, தேவை நுகர்வு மற்றும் வெளிச் சத்தை மேம்படுத்துகிறது, ஆனால் ஒட்டுமொத்த செலவுகளைக் குறைக்கிறது, உஜாலாத் திட்டம் இந்த நோக்கங்களை அடைவதில் வெற்றிகரமாக உள் ளது.

21 பில்லியனுக்கும் அதிகமான வருடாந்திர விற் பனையுடன், இந்தியா உலகின் மிகப்பெரிய எல்.ஈ.டி. சந்தையாகவும் மாறியுள்ளது. இதன் மத்தியில், உள் நாட்டில் எல்.ஈ.டி. பல்புகளின் உற்பத்தி 1 லட்சத்தில் இருந்து 4 கோடியாக அதிகரித்துள்ளது. இத்திட்டத் தின் விளைவாகவும், உற்பத்தியின் அளவு அதிகரிப்ப தாலும், 'மேக் இன் இந்தியா' எல்.ஈ.டி. பல்பின் விலை தோராயமாக 90 சதவீதம் குறைந்துள்ளது.

எல்.ஈ.டி. பல்புகளைப் பயன்படுத்துவது, அதிக வெளிச்சம் தரும், அதேசமயம் குறைந்த மின்சாரச் செலவை ஏற்படுத்தும். சாதாரண இந்தியர்களுக்கும் கைக்கு எட்டும் செலவினமாக அது இருக்கும். 2015 ஆம் ஆண்டில் ரூ.420க்குக் கிடைத்த அதே பல்புகள் இப்போது வெளிச்சந்தையில் 2023இல் ரூ.75க்கு விற்கப்படுகின்றன.

திட்டத்தின் பலன்கள் நாட்டின் பெரும்பகுதிக்கு விரிவுபடுத்தப்படுவதை உறுதிசெய்வதற்காக, பல்வேறு மாநில அரசுகள் பல்வேறு மாநில கிராமப்புற வாழ்வாதார பணிகள் மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெ ழுத்திட்டுள்ளன.

இந்த பணிகள், முகமைகள் மற்றும் சுயஉதவி குழுக்கள் மூலம் தான் மாநில அரசுகள் உஜாலா உபக ரணங்களை விநியோகிப்பதை நோக்கமாகக் கொண் டுள்ளன. அதனுடன், ஸ்மார்ட் எல்.ஈ.டி. விளக்குகள் மற்றும் திறமையான டி.ஸி. மின் மோட்டார் மின்விசிறி கள், பல்புகள், குழாய் விளக்குகள் மற்றும் தெரு விளக் குகளுக்குப் பதிலாக, உஜாலாவின் நன்மைகளை மக்களுக்கு உகந்த அளவில் கொண்டு போய்ச் சேர்க் கும்.

கூடுதலாக, அதிகபட்ச வெளிச் சந்தையைச் சென் றடைவதை உறுதி செய்வதற்காக, உஜாலா சாதனங் களை விநியோகிக்க சிசிஜீஎஸி திட்டத்தின் நோடல் ஏஜென்சி அஞ்சல் துறையுடன் கூட்டு சேர்ந்துள்ளது.

நாட்டின் கிராமப்புறங்களில் வசதியான சில்லறை விற்பனை கவுன்டரை வழங்க பிந்தைய நாடு தழுவிய நெட்வொர்க் இது.

எனவே, நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த புதிய எரிசக்தி புரட்சியின் மூலம், எல்.ஈ.டி.களின் விலையில் குறிப் பிடத்தக்க குறைப்பு மற்றும் நுகர்வோரின் மின் கட்ட ணத்தில் அடையக்கூடிய சேமிப்பை உறுதி செய்யும் இரட்டை செயல்பாட்டின் மூலம் இந்திய நாடு கோடிக் கணக்கான ரூபாய்களை மிச்சப்படுத்தியுள்ளது.

எவ்வாறாயினும், நமது சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ள கடைசி நபருக்கும் தத்தெடுப்பு ஒரு நிலையான மட்டத்தில் தொடரும் வரை, இதுவரை அடையப்பட்ட நன்மைகள் நீண்ட கால சாதனைகளாக மாறாது.

சாதாரண மக்களுக்கு மலிவு விலையில் எரிசக்தி கிடைப்பதும் அணுகுவதும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான ஊக்கிகளாகவும், மனநிறைவு வாழ்க்கைக்கான முக்கிய கருவிகளாகவும் உள்ளன. பருவநிலை மாற்றக் கவ லைகளை எதிர்கொள்ளும் போது இந்த வளர்ச்சியானது நிலையான முறையில் அடையப்பட வேண்டும். இது ஆற்றல் மற்றும் காலநிலை நெருக்கடி ஆகிய இரண்டும் தவிர்க்கப்படுவதை உறுதி செய்யும்.

**(மூலம்: ஏ.என்.ஐ.)**

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## அறிவுரைகளுக்கு புறம்பாகவே இருந்தமை



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 234

தமிழ் மக்களுக்கு எதிரான தொடர்ந்த மனித உரிமை மீறல்களின் ஆதங்கங்களில் இருந்த சர்வதேச அரசுகள், தமிழ் புலம்பெயர் ஆதரவாளர்களின் புத்திஜீவிகள், அவர்களுக்குஅனுசரணையாக இயங்கிய சர்வதேச சட்டத்தரணிகள், அரசியல் வல்லுநர்களின் சமர்ப்பணங்களில் மூன்றாம் தரப்பின் அனுசரணையுடனான சர்வதேச மத்தியஸ்தத் திட்டத்திற்கு இணங்க வருமாறு சந்திரிகா அரசுக்கு அழுத்தங்கள் தந்து, பின் விடுதலைப் புலிகளையும் அவர்கள் மேல் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு இருந்தாலும் அதைக் கணக்கெடுக்காது, அவர்களை தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவர்களாகவும் பிரதிநிதிகளாகவும் நோர்வேயின் அனுசரணையில் அமைந்த இணக்க மேசைக்கு வரக் காய்களை நகர்த்தின.

அவை ஓரிரு மாதங்களில் ஏற்படுத்தப்பட்டவை அல்ல. வருட கணக்கில் அரசின் தலைவர்களையும் விடுதலைப் புலிகளையும் தனித்தனியே ஐரோப்பிய நாடுகளில் சந்தித்து, அந்த நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த சமாதான பேச்சுவார்த்தைகளில் நடந்தவற்றையும், விளைவுகளையும் விரிவாகப் பதிந்திருந்தமையால் அவற்றைப் பற்றி மீள குறிப்பிடத் தேவையில்லை.

பலவாசகநண்பர்கள்நான்குறிப்பிட்ட சர்வதேச அபிப்பிராயங்கள் விடுதலைப் புலிகளின் புலம்பெயர் ஆதரவாளர்களுக்கும் புத்திஜீவிகளுக்கும் தரப்பட்ட போதும், இவற்றைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லையா என வினா வினார்கள். பலர் தூக்கங்களிலிருந்து விழித்து இவையெல்லாம் நடந்தனவா எனக் கேட்பது போல் பட்டது.

பல ஆய்வுகளும் அபிப்பிராயக் கட்டுரைகளும் சந்திரிகா அரசின் காலம் தொட்டு இருந்தன. ஒவ்வொரு நாட்டின் அரசாங்கத்தினாலும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. ஆஸ்திரேலிய அரசு தந்த புத்திமதிகளை நேரடியாக அறிந்திருந்தேன். அவர்கள் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாகப் பட்டியலிடாவிட்டாலும், ஐ.நா. அப்படியாக அவர்களை பதிவு செய்துள்ளது என்ற வட்டத்துக்குள் குளிர்காய்ந்து, மனிதாபிமான உதவிகளுக்கே ஆதரவு தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

என்னோடு இவை பற்றிப் பேசிய நண்பர்களின் மீள்பார்வைகளுக்காக விடுதலைப் புலிகளின் ஆதரவில் மே 1997 ஒட்டாவா கனடாவில் 'தமிழ்த் தேசியமும் ஸ்ரீலங்காவின் சமாதானத்துக்கான தேடுதலும்' என்ற சம்மேளனத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கருத்தாக்கங்களை கவனிக்கலாமெக் குறிப்பிடுகிறேன். இவற்றைக் குறிப்பிட்டது இப்படியாக ஆதாயங்களுக்கான அரசியல் கைமாற்றி ஓடும் ஓட்டங்கள் தொடர்ந்து கொண்டே இருப்பதால், இவற்றின் அனுபவங்களில் இருந்து முன்னெடுக்க வேண்டிய தேவைகள் முக்கியமாகின்றன என்பதைச் சுட்டத்தான்.

### கலாநிதி தயான் ஜயதிலக்கா

தனது இளம் வயதில் இருந்தே, உயர் தர வகுப்பு படித்த நாள்களில், புலன் விசாரணையாளர்களால் அழைக்கப்பட்டு, அவரது இடதுசாரித் தொடர்புகளுக்காக விசாரிக்கப்பட்டவர் தயான். பேராதனை பல்கலைக்கழகத்தில் அரசியல் துறையில் முதல் தர நிலையில் (First Class Honours) பெறுபேறு பெற்று 1982 – 1983 ஆம் ஆண்டுகளில் புல்பிரைட் (Full bright) உதவித்தொகையில் அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள பிங்காம்டன் கலாசாலையில் அரசியல் சமூகவியலில் கலாநிதி பட்டத்துக்காக பயின்றவர். அங்கு பயிலும்போது எல்சல்வடோர், கௌத்தமாலா, நிக்ராகுவா நாடுகளில் நடந்த இடதுசாரிக் கிளர்ச்சிப் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக இயங்கியவர். அந்த ஆண்டில் ஸ்ரீலங்காவின் தேர்தலை பார்வையிட வந்து, நாட்டில் இருந்த வன்முறை இயக்கங்களோடு தொடர்புகளைப் பேணியமையால், அமெரிக்கா திரும்பவில்லை. அந்த நாள்களில் அவர் 'விகல்ப கண்டாயம்' (மாற்றுச் சிந்தனை) என்ற கட்டமைப்பைத் தொடங்கி அதன் சிந்தனைகளாக, தமிழ் விடுதலைக் குழுக்களின் ஆயுதப் போராட்டத்தை ஆதரித்து, அந்தப் போராட்டம் தேசிய விடுதலைக்கானதே ஒழிய, பயங்கரவாதம் அல்ல எனக் கருத்துக்கள் வெளியிட்டவர். விகல்ப கண்டாயம் அதனது இடதுசாரி சிந்தனைப் பாடுகளால் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்துடன் தொடர்புகளைப் பேணியதால், 1986 இல் இந்த அமைப்பு தடை செய்யப்பட்டது. அவற்றின் விளைவாக அவர் கொழும்பு உயர் நீதிமன்றின் முன் குற்றச்சாட்டப்பட்டவரானாலும், அந்த நாள்களில் பிடிபடாது தலைமறைவாக இருந்து, பின்னர் இந்தியாவிற்குத் தப்பி ஓடி, பின்பு ஜனாதிபதி ஜே.ஆரது பொது மன்னிப்பில் குற்றச்சாட்டுகளிலிருந்து நீக்கப்பட்டார்.

விஜய குமாரதுங்கவின் மறைவுக்குப் பின் அவரது கட்சியில் சேர்ந்து, அதன் மத்திய குழுவில் அங்கத்தினரானாலும், அதில் நீடிக்காது, வடக்கு, கிழக்கின் மாகாண சபையின் திட்டமிடலும் இளைஞர் சேவைகளுக்குமான அமைச்சர் பதவியில் 1989 வரை இருந்து, கருத்து வேற்றுமைகளால் வெளியேறி, அப்படியான பாகுபாடான அரசியலில் இருந்து ஒதுங்கி, ஜனாதிபதி பிரேமதாஸாவின் பெரும் ஆதரவாளராக மாறி, அவரது ஆலோசகராகவும் செயல்பட்டு, பல புத்திஜீவிகளின் கட்டமைப்புகளிலும் பணியாற்றி, கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவின் அரசியல் சித்தாந்தங்கள் பற்றி ஆய்வறிக்கைகள் சமர்ப்பித்து, சர்வதேச வட்டங்களிலும், இடதுசாரி அரசியல் பகுதிகளிலும் அறியப்பட்டவரானார்.

இவரை ஜனாதிபதி மஹிந்த ஸ்ரீலங்காவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக ஐ.நா. சபைக்கு 2007 இல் அனுப்பி, ஒக்டோபர் 2009 வரை அப்பதவியில் இருந்தார். அந்த நாள்களில், 2007 – 2008 இல், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உப தலைவராகவும் பதவி வகித்தவர். இவரது பின்னணியும், தமிழ் விடுதலைக் குழுக்கள் பற்றிய அறிவும் அனுபவமும், இடதுசாரித் தொடர்புகளும், 2009இல் ஜனாதிபதி மஹிந்த பயங்கரவாதத்தை முறியடித்தார் என்ற புகழ் மாலையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கத்தவர்கள் சூட்டுவதற்கு காரணமாக இருந்தன எனக் கருதப்பட்டது.



போர் முடிந்து பயங்கரவாதம் அழிக்கப்பட்டு விட்டதால் இனி அரசியல் தீர்வைத் தர வேண்டும், 13ஆம் திருத்தச் சட்டத்தை அமுலாக்க வேண்டும் என ஐ.நா. அங்கத்துவ நாடுகளிடையே அழுத்தம் கூறி அவர் பேசியமை, ஏந்த வித காரணங்களும் தரப்படாது தீவிரவாதிகளின் உந்துதல்களினால் – 2010 வரை நீடிக்கப்பட்ட அவரது பதவி உடனடியாக காலி செய்யப்பட்டு – ஜூலை 2009 நாட்டுக்குத் திரும்பி வரவழைக்கப்பட்டார்.

ஆனால் பின்னால் ராஜதந்திர உறவுகளைப் பேண பிரான்ஸ், ரஷ்யா போன்ற நாடுகளுக்கு இவர் அனுப்பப்பட்டாலும், வெளிவிவகார அமைச்சினோடு கொள்கைகள் பற்றிய முரண்பாடுகளிலேயே இருந்தார். அதே சமயம் அவர் தொடக்கத்தில் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை ஆதரவளித்தவராயினும், ஜனாதிபதி மஹிந்தவைச் சார்ந்தவுடன் விடுதலைப் புலிகளிடமிருந்து தமிழ் மக்களைப் பிரித்துப் பார்க்காது, தனது கருத்தாக்கங்களில் சிறிசேனா – ரணில் அரசின் புதிய அரசமைப்பைச் சாடி, அது சமஷ்டிக்கு வழிவகுக்கும், அதனால் புலம்பெயர் தமிழ் சமூகம் ஆளுமை செலுத்தி, அதனூடாக சிங்கள பெரும்பான்மையைப் பிரித்து, அவர்கள் இன்னொரு போரை வெல்ல முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தி விடுவார்கள் என்ற பயங்களை மிகப் படுத்தினார்.

ஆயினும் கோட்டாபயவை ஜனாதிபதியாக மஹிந்த தேர்ந்தெடுத்த போது, அது நாட்டுக்குச் சரியான தீர்வு அல்ல, இவர் சிங்கள, பௌத்த இனவாதத்தைப் பெரிது படுத்தவே முனைவார் எனவும், இவரது மிக நெருங்கிய ஆதரவுத் தளமாக பௌத்த பலசேனாவே இயங்கும் எனவும் கூறி வெளியேறி, பின் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து, இன்றும் அவரது ஆலோசகராக இயங்குகிறார்.

சர்வ கட்சி பேச்சு வார்த்தைகளுக்கு தமிழ்த் தரப்புகள் புறப்படும் போது அவர், 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமலப்படுத்த கோரியும், அதன் சரத்துக்கள் 5 வருடங்களுக்குள் முற்றாக அமுல் நடத்தப்பட காலக்கெடு வைத்து, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்கிறார். அரசமைப்புச் சட்டத்தில் உள்ள சரத்துக்களை அமல்படுத்த கோரி ஏன் இதுவரை வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை என்பது அவரது கேள்வி.

அடுத்து, காணி, பொலிஸ் அதிகாரங்களை ஸ்ரீலங்கா இலகுவில் கையளிக்கப் போவதில்லை, அதனை இந்தியா மூலமாகப் பேச்சுவார்த்தைகளில் பெற்றுக் கொள்ள வழிகள் தேட வேண்டும், அதேசமயம் மாகாண சபைகள் பயனுள்ளவகையில் இயங்குதல் வேண்டும், இணக்கம், பொறுப்புக் கூறல் என்பவை பற்றி டெஸ்மெண்ட் சில்வா தந்த அறிக்கையைப் பரிசீரித்து நடைமுறைப் படுத்தப்படலாம் எனவும், சமத்துவமாகவும் சமாதானமாகவும் வாழ நோர்வேயின் போர்கன் தீர்மானத்தையும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 2008 – 2009 அறிக்கைகளையும் பயன்படுத்தலாம் எனக் கருதுகிறார்.

அரசியல் தீர்வு எனும் போது 13ஆம் திருத்தத்திலேயே அது அமைய வேண்டும் என்பதும், அந்த ஆலோசனைகள் எதிர்க்கட்சி தரப்பில் சஜித் பிரேமதாசாவையும் சென்றடைந்திருக்கும் எனவும் எதிர்பார்க்கலாம்.

இவற்றிலிருந்து தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டியது ஒரு முனைப்பை முன்னெடுக்கும் போது அவற்றைப் புத்திசாலித்தனமாக, தந்திரமாகக் காரியமற்ற கூடியவர்களை தேர்ந்தெடுப்பது என் பதுதான். போர் நடந்த காலத்திலும் முடிவிலும் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாக காட்டி, அவர்களை அழித்தமையை நியாயப்படுத்த தயான் ஜெயதிலக்கவை தேர்ந்தெடுத்தார் மஹிந்த. அடுத்து ஐ.நாவில் அழுத்தம் அமெரிக்காவினால் அதிகரிக்க, மேலும் இடதுசாரியான தமிழ் பின்னணி கொண்ட தாமர குணநாயகத்தை நியமித்து, பின் வெளிவிவகார அமைச்சின் செயலாளராக இருந்த பாலித கொஹன்னவை அமர்த்தி, இப்பொழுது அவரை சீனாவின் இராஜதந்திர உறவுகளுக்குப் பயன்படுத்துகிறார்கள்.

தமிழ் அரசியல் தலைமைகளும் வீட்டுக்கு வீடு, கூட்டம் கூட்டி, ஒவ்வொரு வரைப் பற்றிப் பேசிவிட்டு ஏதோ ஒரு தீர்மானக் கடிதத்தை அனுப்பிவிட்டு நடப்பதை பார்ப்போம் என்று இருந்து விடுகிறார்கள். வினைத்திறனுக்கும் விழலுக்கும் வரும் காரிய சித்திகள் அவ்வளவே.

(வளரும்...)

## பொதுஜன பெரமுன - .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு கட்சி மட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வேட்பு மனுத்தாக்கல் செய்ததன் பின்னர் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைந்து அரசியல் கூட்டணி அமைப்பது தொடர்பில் அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது அவசியமாகும் என பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்கு தயாராக உள்ளோம். உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பொருளாதார மீட்சிக்காக எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிணைந்து செயற்படுத்த இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் அத்தியாவசிய உணவு பொருள்களின் விலை குறைப்பு தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிற்கு இடையிலானபுதியஅரசியல்கூட்டணிதொடர்பில் இரு அரசியல் கட்சிகளின் மாவட்ட தலைவர்களுடன் பேச்சுவார்த்தையை மேற்கொண்டு இவ்வாரத்தில் உத்தியோகபூர்வ தீர்மானத்தை எடுக்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ரணிலிடமிருந்து .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க் கட்சிகள் கொழும்பில் கூடி ஆராய்ந்தன.

இந்தக் கூட்டத்தில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., கோவிந்தன் கருணாகரம் (ஜனா) எம்.பி., ஹென்றி மகேந்திரன் (மூவரும் ரெலோ), த.சித்தார்த்தன் எம்.பி., ஆர்.இராகவன்(இருவரும் புளொட்), இரா. சம்பந்தன் எம்.பி., மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.(மூவரும் தமிழரசு), சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம் ( இருவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி) ஆகியோர் பங்குபற்றினர்.

இதன்போதே மேற்படி விடயம் காட்டமாக வலியுறுத்தப்பட்டதாக அறிய வந்தது. இதற்கமைய இன்றைய பேச்சு இடம்பெறும். இதன்போது அரச தரப்பில் இருந்து உறுதியான பதில் அல்லது அதற்கான சமிக்ஞைகள் கிடைத்தால் மட்டுமே மேற்கொண்டு பேச்சில் ஈடுபடுவதாகவும் அல்லது அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிப்பதாகவும் தமிழ்க் கட்சிகள் இணக்கம் கண்டுள்ளன என அறிய வந்தது.

## கொங்கிறீட் தூண் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதுரங்குளி – மல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:–

மதுரங்குளி மல்லம்பிட்டி பகுதியில் உள்ள பழைய தைக்கா பள்ளியின் கூரை உடைக்கும் வேலை நேற்று முன்தினம் முதல் முன்னடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், உயிரிழந்த நபர் நேற்று பள்ளியின் மேல் கூலைப்பகுதியில் இருந்த கொங்கிறீட் தூணை உடைக்கும் போது அதில் வேலை செய்துகொண்டிருந்த நபர் மீது அந்த கொங்கிறீட் தூண் உடைந்து கீழே விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த திடீர் அனர்த்தத்தின் போது அங்கு வேலை செய்துகொண்டிருந்த இந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அங்கு வருகை தந்த பொலிஸார் கள விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதேவேளை, சம்பவ இடத்திற்கு வருகை தந்த புத்தளம் திடீர் மரண விசாரனை அதிகாரி பீ.எம்.ஹிாம், சம்பவ இடத்தில் மரண விசாரணையை நடத்தியதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டுசொல்லுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் நீடித்துவரும் இனப்பிரச்சினையே பொருளாதார நெருக்கடிகளுக்கு மூலகாரணம்!

## வே.இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



இலங்கையில் நீடித்துவரும் இனப் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு எட்டப்ப டாதமை காரணமாகவே பொருளாதாரப் பிரச்சினையும் தொடர்வதாக நாடாளு மன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஆகவே பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதாக இருந்தால் நாட்டில் உள்ள சகல இனங்களுக்கு இடையிலும் ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க தமிழகத் தலைவர்கள் ஊடாக இந்திய அரசாங்கத்தை வலியுறுத்தும் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் 200 ஆண்டுகளுக்கு முன்னதாகத் தமிழகத்தின் பல பாகங் களில் இருந்து தோட்டப் பணிகளுக்காக கூலிகளாகக் கொண்டுசெல்லப்பட்ட மக் கள் இன்னமும் நெருக்கடிக்குள்ளேயே உள்ளார்கள் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆகவே,தீர்க் கப்படாமல் உள்ளமலையக மக்கள் பிரச்சி னைகளும் தீர்க் கப்படவேண்டும் என்றும் அதற் காக அனைத்து தமிழ்க் கட்சிக ளும் ஒன்றி ணைந்து செயற் படவேண்டும் என்றும் வே.இராதாகிருஷ் ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இராஜாங்க அமைச்சர்கள் நாட்டில் எதற்கு நியமிப்பு?

## ஜீ.எல்.பீரிஸ் கேள்வி



தேர்தலை நடத்த நிதி இல்லை என் றால், இராஜாங்க அமைச்சர்கள் 39 பேரை நீக்க வேண்டும் என சுயாதீன நாடாளு மன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) சுதந்திர மக் கள் காங்கிரஸ் தலைமையகத்தில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில் –

நாட்டில் தேர்தலை நடத்துவதற்கு நிதி இல்லை என்று அரசாங்கம் போலியான பிரசாரங்களை செய்து வருகிறது. உண் மையில் நிதி இல்லை என்றால் நாட்டி லுள்ள 39 இராஜாங்க அமைச்சர்களை நீக்க வேண்டும்.

அத்துடன் 39 இராஜாங்க அமைச் சர்களுக்காக 340 வாகனங்கள் பயன் படுத்தப்படுகின்றன. இதற்கு பாரியளவில் நிதி செலவிடப்படுகிறது.

மேலும் முன்னாள் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ இராஜாங்க அமைச்சர்கள் எவருமில்லாது நாட்டை ஒரு வருடம் ஆட்சி செய்தார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். போதனாவில் கவனவீர்ப்பு போராட்டம்!



வாழ்க்கை செலவு படியை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கவனவீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

சிறிலங்கா ஜனரய சுகாதார சேவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்தியசாலையில் பணி யாற்றும் சுகாதார ஊழியர் கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது வாழ்க்கை செலவு படியை அதிகரித்தல், வங்கிகளில் அதிகரித்த வட் டியை நிறுத்துதல் , முறை யற்ற நியமனத்தை நிறுத் துதல் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதா கைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப்போராட்டம்வைத்தியசாலையின் அத்தியாவசிய சேவைகளை பாதிக்காத வகையிலேயே மேற்கொள்ளப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

# புறக்கோட்டை பெஸ்டியன் மாவத்தையில் துப்பாக்கிப் பிரயோகம்; மூவர் கைது!

கொழும்பு, புறக்கோட்டை பெஸ்டியன் மாவத்தையில் இருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு ஒருவரின் உயிரிழப்புக்கு காரணமான சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் பயன்படுத் திய மோட்டார் சைக்கிள், மற்றுமொரு மோட்டார் சைக்கிள், ஓட்டோ என்பன கோனாபொல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மறைத்துவைக்கப்பட்டி ருந்த நிலையில் கைப்பற்றப்பட்டன என பிலியந் தலை பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். 6 கிராம் ஐஸ் மற்றும் 2 கிராம் கஞ்சாவும் இவர்களிடமி ருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப் பட்ட மேலதிக விசாரணைகளில் பல தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன என வும் பொலிஸார் கூறினர்.

கொலைக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் மற்றும் திருடப்பட்ட மற்றுமொரு ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகி யன கோனாபொலவில் உள்ள ஒருவரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை விசாரணைகளில் தெரிய வந்ததைய டுத்தே அவை கைப்பற்றப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இறப்பர் ஏற்றுமதி வருவாய் நாட்டில் அதிகரித்தது!

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு



2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகை யில் 2022 ஆம் ஆண்டில் இறப்பர் தொடர்பான ஏற்றுமதி வருமானம் 39 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும், மூலப் பொருள்களின் இறக்குமதி 93 வீதத்தால் குறைந்துள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரி வித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், இறப்பர்விலை வேகமாக வீழ்ச்சியடைந்து, மேலும் இறப்பர் மூலப்பொருளாக ஏற்றுமதி செய்யப்பட்டாலும், இறப் பர் சார்ந்த உற்பத்தி தொழிற்சாலை களுக்கு போதுமானதான உற் பத்தி இல்லாததால், பிரச்சினை எழுந்துள்ளது தெரியவந்தது.

சம்பந்தப்பட்ட தரப்பினரால் தயாரிக் கப்பட்ட வேலைத்திட் டத்தின்படி, 2021 டிசெம்பரில், மூலப்பொருளாக இறக்குமதி செய்யப்பட்ட 22 ஆயிரம் மெற்றிக் தொன் இறப்பரின் அளவை 2022 டிசெம்பரில் 1,548 மெற்றிக் தொன்னாகக் குறைக்க முடியும் என்று அமைச்சர் கூறினார்.

2021 ஆம் ஆண்டில் 105 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்த இறப்பர் தொடர்பான பொருள்களின் ஏற்றுமதியை 2022 ஆம் ஆண்டில் 146 கோடியே 30 வட்சம் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்க முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

# பொருளாதார நெருக்கடியாக இருந்தாலும் அரசு தேர்தலுக்கு நிதி ஒதுக்க வேண்டும்!

## தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

எவ்வித நெருக்கடி ஏற்பட்டாலும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான பணத்தை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக் கும் போதே தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு என மதிப் பிடப்பட்ட தொகையை விடக் குறைவான செலவில் தேர்தலை நடத்திமுடிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ‘உலகளாவிய தெற்கின் குரல்’ மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி இந்தியாவுக்கு!



உலகளாவிய தெற்கு உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் இந்தியாவுக் குச் செல்லவுள்ளார் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் ‘உலகளாவிய தெற்கின் குரல்’ மாநாடு ஜனவரி 12, 13 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் அண்டைய நாடுகளின் தலைவர்களைத் தவிர, ஆபிரிக்கா அங்கோலா, கானா, நைஜீரியா, மொசாம்பிக், செனகல், தாய்லாந்து, கம்போ டியா, வியட்நாம், உஸ் பெகிஸ்தான், மங்கோலியா, ஐக்கிய அரபு இராச்சியம், பப்புவா நியூகினியா ஆகிய நாடுகளின் தலைவர்களும் இந்த மாநாட் டில் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக் கது.

# கனடா அரசால் இலங்கைக்கு 30 கோடி டொலர் நிதி உதவி!

பொருளாதார நெருக்கடியால் பாதிக் கப்படக்கூடியவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கனடா அரசாங்கம் 30 கோடி டொலர் நிதி உதவியை வழங் கியுள்ளது.

கனேடிய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஆகியன இணைந்து இந்த உதவியை வழங் கியுள்ளன. அதன் படி உணவு, சுகாதாரம், போஷாக்கு வசதிகள், குடிநீர் தேவைகள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை இதன் மூலம் வழங்க முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.01.2023இல் வெளியிடப்பெற்றது.